1987 நவம்பர் 12[

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. நகராட்சி மன்றங்கள் ஏற்பாடு செய்யும் விழாக்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்படவேண்டிய நபர்கள் பற்றிய விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 13–4–1987 ஆம் நாளிட்ட 396 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

86. மாம்பழங்கள் வணிகத்தை பொறுத்த மட்டில் தர்மபுரி மாவட்டம் முழுவதையும் அறிவிக்கப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 27–2–1987 ஆம் நாளிட்ட 242 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 30 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[.

87. உளுந்தைப் பொறுத்த மட்டில் கோயம்புத்தூர் , பெரியார் மாவட்டங்களை அறிவிக்கப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 3–7–1987 ஆம் நாளிட்ட 1051 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை]1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

88. அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தை சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 13–8–1987 ஆம் நாளிட்ட 648 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை]1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

89. 1984-85 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை, (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (3) பிரிவுக் கூறின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ் ஆங்கிலம்).

90. 1985-86 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 323 (2) பிரிவுக் கூறின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

[1987 நவம்பர் 12

91. 1979-80 ஆம் ஆண்டிற்கான ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

92. 1980-81 ஆம் ஆண்டிற்கான ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

13. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

14. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS